சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி
வழக்கு எண். ஓ.எஸ். 119/2017

**PW 2 பரமசிவம்** **19.03.2024**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு 3 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் மரப்பேட்டை பள்ளத்தில் குடியிருந்து வருகிறேன். 40, 45 வருடங்களாக அங்கு குடியிருந்து வருகிறேன். எனது வயது 58. குப்புசாமி, நாகராஜ் ஆகியோர் சொல்லி சாட்சியமளிக்க நீதிமன்றம் வந்தேன். அவர்கள் என் வீட்டிலிருந்து 3 வது வீட்டில் அவர்கள் என்ன சொன்னார் நான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் நான் அவர்கள் குடியிருப்பது சம்மதமாக சொல்வதற்காக வந்தேன். நான் 40, 45 வருடங்களாக மரப்பேட்டை பள்ளத்தில் குடியிருந்து வருகிறேன் என்றால் ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்லும் திருமூர்த்திக்கும் இவ்வழக்கில் சொல்லப்பட்டுள்ள துரை வளர்மதி சொல்லும் திருமூர்த்திக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரிதான். என்ன வழக்கு நடைபெறுகிறது என்ற முழு விவரம் தெரியாது என்றால் சரிதான். என் பக்கத்து வீட்டுக்காரர்கள் எத்தனை வருடங்களாக குடியிருந்து வருகிறார்கள் என்றால் என்ன ஆதாரம் உள்ளது என எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள வாசகங்களை வழக்கறிஞர் சொல்லி தாக்கல் செய்தேன். திருமூர்த்தி கோவை ராமகிருஷ்ணா மருத்துவமனையில் இறந்த சமயம் எனக்கு 15 வயதிருக்கும் மேல் இருக்கும். அவர் இறந்த அன்று நான் மரப்பேட்டையில் தான் இருந்தேன். பள்ளிக்கூடம் சென்றிருந்தேன். எனக்கு எந்த விவரமும் தெரியாது என்றாலும் கேட்டுக்கொணட்தற்காக அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி